கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

முன்னிலை:- திரு.டி.பன்னீர்செல்வம், எம்.பி.ஏ., எம்.எல்.,

கூடுதல் மாவட்ட நீதிபதி, மயிலாடுதுறை.

| | | | |
|---|---|---|---|
| அ.சா. 3 | நாள்: 21.04.2022 | | |
| அமர்வு வழக்கு எண். | 42/2020 | | |
| பெயர் | ராமமூர்த்தி | த/பெ | கலியபெருமாள் |
| வயது | | தொழில் | |
| ஜாதி | | மதம் | |
| கிராமம் | | தாலூக்கா | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்பட்டார்.

முதல் விசாரணை:

நான் தற்போது வைத்தீஸ்வரன் காவல் நிலையத்தில் சி.உ.ஆ. ஆக பணிசெய்து வருகிறேன்.முன்பு நான் மயிலாடுதுறை காவல் நிலையத்தில் த.கா ஆக பணிபுாிந்தபோது கடந்த 14.03.2016 ல் நான் மாவட்ட தனி சிறப்பு குற்றபிாிவில் பணியாற்றினேன். அப்போது என்னுடன் கருணாநிதி த.கா.,1197, தெய்வசிகாமணி காவலா் 784, ஸ்டாலின் காவலா் 854, சிவராமன்,1151, முகுந்தன, 1326, ஆகியோர்கள் உடன் பணியாற்றினார்கள். கடந்த 14.06.2016 ல்சம்பவத்தன்று திருவெண்காடு காவல்நிலைய குற்ற எண்.99/2016 வழக்கின் தலைமறைவு எதிாியான அகோரம் என்பவரை பிடிப்பதற்காக மேலிட உத்தரவுப்படி ஆய்வாளாருக்கு கிடைத்த ரகசிய தகவலின்படி காவல் ஆய்வாளா் முருகவேல் தலைமையில் திருவெண்காடு சம்பாகட்டளை பகுதியில் ஆஜா் எதிாியை பிடிப்பதற்காக தனிபிாிவாக ரோந்து நடவடிக்கை மேற்கொண்டோம். சம்பா கட்டளையில் உள்ள எதிாிக்கு சொந்தமான மாந்தோப்பு பகுதியில் ஆய்வு நடத்தினோம். அப்போது நாங்கள் சென்றபோது ஆஜா் எதிாி அவருடைய மாந்தோப்பில் மாமரம் அருகே வழியில் எதிாி நின்றகொண்டிருந்தார். அ வா் எங்களை பார்த்ததும் ஓட முயற்சி செய்தார். அவரை நாங்கள் ஓட முயற்சித்தவரை பிடித்தோம். அப்போது அவா் கையில் ஒரு நீலகலா் பையை வைத்திருந்தார். அந்த பையை ஆய்வாளா் எதிாியிடமிருந்து வாங்கி ஆய்வு செய்தார். அதில் ஒரு ஆட்டோ பிஸ்டல் என்று எழுதியிருந்த ஒரு கைத்துப்பாக்கி இருந்தது. அதை ஆய்வாளா் பாிசோதித்தார். அந்த கைத்துப்பாக்கியில் இரண்டு ரவுண்டு குண்டு இருந்தது. மேலும், அந்த பையில் எதிாி இரண்டு நாட்டு வெடி குண்டுகளை வைத்திருந்ததையும், பையில் இருந்ததை ஆய்வாளா் எடுத்தார். அப்போது அந்த நீலப்பை மற்றும் அதில் இருந்த

கைத்துப்பாக்கி மற்றும் இரண்டு நாட்டு வெடிகுண்டுகளை ஆய்வாளா் கைப்பற்றுதல் மகசாில் கைப்பற்றினார். பின்னா் ஆஜா் எதிாியையும், தடயத்தையும் காவல் ஆய்வாளா் திருவெண்காடு காவல் நிலையத்திற்கு கொண்டு வந்து எதிாியை காவல் நிலையத்தில் ஒப்படைத்தார். இவ்வழக்கில் காவல் ஆய்வாளார் விசாரிக்க விபரம் சொன்னேன்.

எதிரி தரப்பிலான குறுக்கு விசாரணை

காவல் பணிக்கு என்னோடு வந்தகருணாநிதி, தெய்சிகாமணி,. சிவராமன், ஸ்டாலின், முகுந்தன் ஆகியோர்கள் என்னோடு பணிபுாிந்தவா்கள் என்றால் சாிதான். நாங்கள் அனைவரும் மயிலாடுதுறை கோட்டத்தில் பணி செய்தோம் என்றால் சாிதான். ஆய்வாளா் முருகவேல் பொறையார் காவல் நிலைய ஆய்வாளராக இருந்தார் என்றால் சாிதான். திருவெண்காடு காவல் நிலையம் சீா்காழி கோட்டத்தில் வருகிறது என்றால் சாிதான். மாவட்ட காவல் கண்காணிப்பாளா் எழுத்துமூலமாகவோ அல்லது வாய்மொழியாகவோ உத்தரவு அனுமதி கொடுத்தால்தான் நாங்கள் வேறு கோட்ட பணியில் ஈடுபடமுடியும் என்றால் சாியல்ல. நாங்கள் மாவட்ட அளவிலான சிறப்பு பிாிவு என்பதால் நாங்கள் மாவட்ட சிறப்பு பணியில் ஈடுபட்டோம். உயா் அதிகாரியின் உத்தரவுப்படி நாங்கள் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டோம் என்றால் சாிதான். அந்த உத்தரவு காவல் ஆய்வாளருக்கு வரப்பெற்றது. அந்த உயா் அதிகாரி யார் என்று எனக்கு தொியாது. முருகவேல் காவல் ஆய்வாளா் தான் கொடுத்த புகாரில் அதாவது அ.சா.ஆ.1 புகாரில் காவலர் 1326 சுந்தரும் ரோந்துக்கு வந்திருந்தார் என்று சொல்லியுள்ளார் என்றால் சாிதான். திருவெண்காடு காவல் நிலைய குற்ற எண்.99/2016 வழக்கின் எதிாிகள் யார் என்று ஆய்வாளருக்குதான் தொியும். 14.03.2016 ல் எதிாி மாந்தோப்புக்கு நாங்கள் பகல் 12.00 மணிக்கு கிளம்பினோம். காவல் ஆய்வாளா் முருகவேலுடன் சோ்த்து மொத்தம் 6 போ் ரைடுக்கு சென்றோம். ஆய்வாளா் ஜீப்பில் சென்றார். நாங்கள் டெம்போவில் சென்றோம். பொறையாரில் இருந்து காவல் ஆய்வாளா் வந்தார். நாங்கள் மயிலாடுதுறையில் இருந்து சென்றோம். நாங்கள் மப்டியில் இருந்தோம். ஆய்வாளா் யூனிபார்ம்பில் இருந்தார். சம்பாகட்டளை மயிலாடுதுறையில் இருந்து சுமார் 25 கி.மீ இருக்கும். சம்பாகட்டளையில் இருந்து திருவெண்காடு சுமார் ஒன்னறை கி.மீ இருக்கும். நாங்கள் சம்பவ இடத்திற்கு சுமார் மதியம் 1.30 மணிக்கு சென்றோம். அங்கு எதிாியின் மாந்தோப்பில்எதிாியும், இன்னொரு நபரும் இருந்தார்கள். அந்த இன்னொரு நபா் எங்களை கண்டதும் ஓடிவிட்டார். எதிாி ஓட எத்தணித்தவரை பிடித்துவிட்டோம். கைப்பற்றுதல் மகசாில் சாட்சியாக கிராம நிா்வாக அலுவலா் மற்றும் அவாின் உதவியாளா் இருந்தார்கள். அவா்கள் பெயா் தற்போது எனக்கு

ஞாபகம் இல்லை. அந்த கைப்பற்றுதல் மகசாில் அவா்கள்தான் கையெழுத்து செய்தார்கள். வேறு யாரும் கையெழுத்து செய்தார்களா என்று எனக்கு ஞாபகம் இல்லை. அங்கு பார்வைமகசர், வரைபடம் தயார் செய்தார்களா என்று எனக்கு தொியாது. எதிாி அகோரத்தை கைது செய்து கைப்பற்றுதல் மகசா் தயார் செய்தது மட்டும்தான் எனக்கு தொியும். கைப்பற்றப்பட்ட கைத்துப்பாக்கி Auto Pistal USM என ஒரு புறமும், மறுபுறம் 9.657 Round N110 என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சாிதான். இரண்டு தோட்டாவும் 1.65KF என்று எழுதப்பட்ட இரண்டு நாட்டு வெடிகுண்டுகளும் கைப்பற்றப்பட்டது என்றால் சாிதான். முருகவேல் ஆய்வாளா் திருவெண்காடு ஆய்வாளாிடம் தனி அறிக்கை கொடுத்தார். வேறு யாரும் தனி அறிக்கை கொடுத்ததாக எனக்கு தொியாது. முருகவேல் ஆய்வாளர் என்னை விசாரிக்கவில்லை. திருவெண்காடு போலிசார் என்னை விசாரித்தார். 14.03.2016 ல் என்னை திருவெண்காடு காவல் ஆய்வாளா் என்னை விசாரித்தார். நேரம் எனக்கு ஞாபகம் இல்லை. நான் சம்பவ இடம் செல்லவில்லை என்றால் சாியல்ல. பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சாியல்ல. எதிாிக்கும் வழக்கு சம்பவத்திற்கும் சம்பந்தமில்லை என்றால் சாியல்ல.

மறு விசாரணை

இல்லை.

கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

முன்னிலை:- திரு.டி.பன்னீர்செல்வம், எம்.பி.ஏ., எம்.எல்.,

கூடுதல் மாவட்ட நீதிபதி, மயிலாடுதுறை.

| | | | |
|---|---|---|---|
| அ.சா. 4 | நாள்: 21.04.2022 | | |
| அமர்வு வழக்கு எண். | 42/2020 | | |
| பெயர் | தெய்வசிகாமணி | த/பெ | தயாநிதி |
| வயது | | தொழில் | |
| ஜாதி | | மதம் | |
| கிராமம் | | தாலூக்கா | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்பட்டார்.

முதல் விசாரணை:

நான் தற்போது பூம்புகார் காவல் நிலையத்தில் முதல் நிலை காவலா் ஆக பணிசெய்து வருகிறேன். சம்பவத்தின்போது பாலையூா் காவல் நிலைய காவலராக இருந்தேன். சம்பவம் பற்றி தொியும் போலிசார் என்னை விசாரித்தார்கள். கடந்த 14.03.2016 அன்று மயிலாடுதுறை குற்ற தனிபிாிவில் இருந்தபோது அந்த டீமின் பொறுப்பாளராக இருந்த பொறையார் கா.நி. ஆ. முருகவேல் என்பவருக்க ரகசிய தகவல் கிடைத்தது. அந்த டீமில் நானும், ராமமூா்த்தி , கருணாநிதி, முகுந்தன், ஸ்டாலின், சிவராமன் ஆகியோர்கள் இருந்தனா். நாங்கள் ஆஜா் எதிாியை தேடிவந்தோம். அப்போது திருவெண்காடு சம்பா கட்டளையில் உள்ள அவரது வீட்டின்அருகே உள்ள மாந்தோப்பில் இருந்ததாக கேள்விபட்டு சென்றோம். நாங்கள் மதியம் 12. 12.30 மணியளவில் சென்றபோது எங்களை பார்த்தவுடன் ஓட முயற்சி செய்தார். அப்போது அவா்கையில் நீலநிற பை வைத்திருந்தார். அதில் ஒரு கைத்துப்பாக்கி வைத்திருந்தார். அதில் ஒருபக்கம் USM என்று எழுதப்பட்டிருந்தது. இன்னொரு பக்கம் 9.6S7 Round N110 என்று எழுதப்பட்டிருந்தது. இரண்டு வெடி குண்டுகள் இருந்தது. அதில் 1.6 KM என எழுதப்பட்டிருந்த- காவல் ஆய்வாளா் கைபற்றி கைபற்றுதல்மகசா் தயார் செய்து திருவெண்காடு காவல் ஆய்வாளாிடம் ஆஜா் எதிாியையும், கைப்பற்றிய தடயத்தையும் ஒப்படைத்தோம். இவ்வழக்கில் காவல் ஆய்வாளார் விசாரிக்க விபரம் சொன்னேன்.

எதிரி தரப்பிலான குறுக்கு விசாரணை

இல்லை

கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

முன்னிலை:- திரு.டி.பன்னீர்செல்வம், எம்.பி.ஏ., எம்.எல்.,

கூடுதல் மாவட்ட நீதிபதி, மயிலாடுதுறை.

அ.சா. 5 நாள்: 21.04.2022

அமர்வு வழக்கு எண். 42/2020

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சிவராமன் | த/பெ | சுப்புராஜ் |
| வயது | | தொழில் | |
| ஜாதி | | மதம் | |
| கிராமம் | | தாலூக்கா | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்பட்டார்.

முதல் விசாரணை:

நான் தற்போது திட்டச்சேரி காவல் நிலையத்தில் முதல் நிலை காவலா் ஆக பணிசெய்து வருகிறேன். சம்பவத்தின்போது செம்பனார்கோயில் காவல் நிலைய காவலராக இருந்தேன். சம்பவம் பற்றி தொியும் போலிசார் என்னை விசாரித்தார்கள். கடந்த 14.03.2016 அன்று மாவட்ட குற்ற தனிபிாிவில் இருந்தபோது அந்த டீமின் பொறுப்பாளராக இருந்த பொறையார் கா.நி. ஆ. முருகவேல் என்பவருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. அந்த டீமில் நானும், ராமமூா்த்தி , கருணாநிதி, முகுந்தன், ஸ்டாலின், தெய்வசிகாமணி ஆகியோர்கள் இருந்தனா். திருவெண்காடு காவல் நிலைய குற்ற எண்.99/2016 ல் சம்மந்தப்பட்ட தலைமறைவு எதிாியான ஆஜா் எதிாியை தேடிவந்தோம். அப்போது காவல் ஆய்வாளா் முருகவேலுக்கு கிடைத்த ரகசிய தகவலின்படி சம்பாகட்டளை மாந்தோப்பில் இருந்ததாக கேள்விபடடோம். மதியம் சுமார் 12 மணியளவில் எங்களை பார்த்தபோது ஓட முயற்சி செய்தார். அவரை பிடித்தபோது அவா்கையில் நீலநிற பை வைத்திருந்தார். அதில் ஒரு பக்கம் Auto pistol USM என்றும், இன்னொரு பக்கம் 9.6 S7Round N 110 என்றும் எழுதப்பட்டிருந்தது. இரண்டு தோட்டாக்கள் மற்றும் 1,65 KF என்று ம் எழுதப்பட்டிருந்தது. அதை காவல் ஆய்வாளா் கைபற்றி திருவெண்காடு காவல் நிலையத்திற்கு ஆஜா் எதிாியையும், தடயத்தையும் திருவெண்காடு காவல் ஆய்வாளாிடம் ஒப்படைத்தோம். திருவெண்காடு ஆய்வாளா் விசாரிக்க நடந்த விபரம் சொன்னேன்.

எதிரி தரப்பிலான குறுக்கு விசாரணை இல்லை

கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

முன்னிலை:- திரு.டி.பன்னீர்செல்வம், எம்.பி.ஏ., எம்.எல்.,

கூடுதல் மாவட்ட நீதிபதி, மயிலாடுதுறை.

அ.சா. 6 நாள்: 21.04.2022

அமர்வு வழக்கு எண். 42/2020

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஸ்டாலின் | த/பெ | சம்மந்தம் |
| வயது | | தொழில் | |
| ஜாதி | | மதம் | |
| கிராமம் | | தாலூக்கா | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்பட்டார்.

முதல் விசாரணை:

நான் தற்போது புதுப்பட்டினம் காவல் நிலையத்தில் முதல் நிலை காவலா் ஆக பணிசெய்து வருகிறேன். சம்பவத்தின்போது சீர்காழி காவல் நிலைய காவலராக இருந்தேன். சம்பவம் பற்றி தொியும் போலிசார் என்னை விசாரித்தார்கள். அப்போது நான் மாவட்ட குற்ற தனிபிாிவில் இருந்தேன். அதில் நானும், ராமமூா்த்தி , கருணாநிதி, முகுந்தன், சிவராமன் தெய்வசிகாமணி ஆகியோர்கள் இருந்தனா். அதில் பொறையார் காவல் ஆய்வாளா் முருகவேல் பொறுப்பாளராக இருந்தார். கடந்த 14.03.2016 அன்று நான் சிறப்பு குற்ற தடுப்பு பிாிவில் பணியில் இருந்தபோது திருவெண்காடு காவல் நிலைய குற்ற எண்-99/2016 வழக்கில் சம்மந்தப்பட்ட தலைமறைவு எதிாியான ஆஜா் எதிாியை தேடிவந்தோம். அப்போது காவல் ஆய்வாளா் முருகவேலுக்கு கிடைத்த ரகசிய தகவலின்படி சம்பாகட்டளை மாந்தோப்பில் ஆஜா் எதிாி இருந்ததாக கேள்விபட்டோம். மதியம் சுமார் 12 மணியளவில் எங்களை பார்த்தபோது ஒட முயற்சி செய்தார். அவரை பிடித்தபோது அவா்கையில் நீலநிற பை வைத்திருந்தார். அதில் ஒரு பக்கம் Auto pistol USM என்றும், இன்னொரு பக்கம் 9.6 S7Round N 110 என்றும் எழுதப்பட்டிருந்தது. இரண்டு தோட்டாக்கள் மற்றும் 1,65 KF என்று ம் எழுதப்பட்டிருந்தது. அதை காவல் ஆய்வாளா் கைபற்றி திருவெண்காடு காவல் நிலையத்திற்கு ஆஜா் எதிாியையும், தடயத்தையும் திருவெண்காடு காவல் ஆய்வாளாிடம் ஒப்படைத்தோம். திருவெண்காடு ஆய்வாளா் விசாரிக்க நடந்த விபரம் சொன்னேன்.

எதிரி தரப்பிலான குறுக்கு விசாரணை இல்லை